# சித்தர்களின் மொழி ஆளுமை

**மு. கவிதா**
**உதவி பேராசிரியர், தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்,**
**கோயம்புத்தூர்**

**முன்னுரை**

சித்தர்கள் சித்தத்தைத் தன் வயப்படுத்தி மோனத்தில் நின்றவர்கள். சித்தத்தையே பரம்பொருளாகக்கொண்டு அன்றும் இன்றும் என்றும் வினாக்களுக்கும் வியப்புகளுக்கும் உட்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் நமக்கு விட்டுச்சென்ற பாடல்களே அவர்களை நமக்கு அடையாளப்படுத்துகின்றன. எளிமையான நடையும் எள்ளல் நிறைந்த சுவையும், நாட்டுப்புறச் சாயல் நிறைந்த தமிழும் சித்தர் பாடல்களின் தனிச்சிறப்புகள். தத்துவங்களை நேரிடையாகவும், பூடகமாகவும், விளிகளின் வாயிலாகவும் விளக்குவதில் சித்தர்கள் வல்லவர்கள். தத்துவச் சிந்தனைகள் மக்களிடையே எவ்வாறேனும் சென்றடைய வேண்டும் என்ற நோக்கம் உடையவர்களாக சித்தர்கள் திகழ்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கான சித்தர்கள் இருப்பினும் தமிழில் பதினெனண் சித்தர்கள் என்ற ஓர் எண்ணிக்கையை இலக்கிய உலகம் கொண்டுள்ளது. இக்கட்டுரையானது சித்தர்களின் மொழி ஆளுமையினை விளக்குவதாக அமைகின்றது.

**உடலைப் பேணிக்காத்தல்**

சித்தர் பாடல்கள் கடினமான தத்துவக் கருத்துகளையும் எளிமையாக மக்களுக்கு வாழ்வியல் சான்றுகளின் வழி உரைப்பதாக உள்ளன. உடலைப் பேணிப் பாதுகாப்பது என்பது மிகவும் அவசியமானது என்பதைப் பலரும் பலகாலம் சொல்லி வருகின்றனர். ‘காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா’ என்று உடலை உதாசீனப் படுத்தியவர்களும் உண்டு. உடல் என்பது சித்திரம் வரைவதற்கான சுவர் போன்றது. இவ் உடலைக் கொண்டுதான் இவ்வுலகில் உயிரானது பக்குவப்பட முடியும் என்று உடலைக் கொண்டாடியவர்களும் உண்டு. தவறான வழியில் உடலைக் கெடுத்துவிட்டால் உயிரழியும். இவ்வுண்மையை

**உடம்பார் அழியின் உயிரார் அழிவார்**
**திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே** **(திருமந்திரம்)**

என்று திருமூலர் நேர்மறையாகவும்,

**நந்த வனத்திலொரு ஆண்டி அவன்**
**நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி**
**கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்**
**கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி** **(கடுவெளிச் சித்தர் 5)**

என்று கடுவெளிச்சித்தர் எதிர்மறையாகவும் எளிமையாகவும் தமது மொழி ஆளுமையால் பாடியுள்ளனர்

**நிலையாமையை உணர்த்துதல்**

சித்தர்கள் நிலையாமையை உணர்த்துவதன் மூலம் மனிதனை நல்வழிப்படுத்தி நிலையான அறத்தைச் செய்ய முனைகின்றனர். சாகும்வரை மருந்தைச் சாப்பிட வேண்டும் என்று சொல்வதற்கும், வாழும் காலம் வரை மருந்தைச் சாப்பிட வேண்டும் என்று சொல்வதற்கும் உளவியல்ரீதியாக வேறுபாடு உண்டு. இரண்டிற்கும் பொருள் ஒன்று ஆயினும் முன்னது அச்சத்தையும் பின்னது நம்பிக்கையையும் தருவதாக அமைகிறது. இவ்வகையில் சித்தர்கள் நிலையாமையை நேர்த்தியாக உணர்த்தி நல்வழிப்படுத்துவதை,

**ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்**
**பேரினை நீக்க பிணமென்று பேரிட்டுச்**
**சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு**
**நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்கள் (திருமந்திரம் 145)**

**நீர்மேற் குமிழியிக் காயம் - இது**
**நில்லாது போய்விடும் நீயறி மாயம்**
**பார்மீதில் மெத்தவும் நேயம் - சற்றும்**
**பற்றா திருந்திடப் பண்ணு முபாயம் (கடுவெளிச்சித்தர் 4)**

என்ற பாடல்கள் வழி உணரலாம். செல்வம் நிலையாமையைச் சொல்வதும் ஈதலறத்தை மனிதன் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காகவே என்பதை நுணுக்கமாகப் பார்க்க வேண்டும்.

**அன்னையின் பெருமை**

பட்டினத்தார் தன் தாய்க்கு இறுதியில் ஈமச்சடங்கினைச் செய்யும்போது அவர் பாடிய பாடல், அன்னையின் மீதான பாசம் நெகிழவைப்பதாகவும், பெருமையை எடுத்துரைப்பதாகவும் அமைந்துள்ளது. இதனை,

**முந்தி தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்தே**
**அந்திப் பகலாச் சிவனை யாதரித்துத் - தொந்தி**
**சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ**
**எரியத் தழல் மூட்டுவேன்**

என்றும்

**“வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலும்**
**கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்**
**சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ**
**விறகிலிட்டுத் தீ மூட்டுவேன்**

என்று பட்டினத்தார் பாடுகிறார். இன்று பலர் வசதி வாய்ப்புகள் இருந்தும் நாகரிகம் என்ற பெயரால் தன் தாய் தந்தையரை முதியோர் இல்லங்களில் கொண்டு விடுகின்ற அவலம் திகழ்ந்து கொண்டுதான் உள்ளது. அன்னையின் பெருமையினை ஒவ்வொருவரும் உணர்ந்திட வேண்டுமென்பதைப் பட்டினத்தார் பாடல்கள் உணர்த்துகின்றன.

**அச்சுறுத்தி அறமுரைத்தல்**

சித்தர்களின் மொழி ஆளுமையில் ஒன்று அச்சுறுத்தி அறமுறைத்தல், சித்தர்கள் பொதுவாக உலக நன்மைக்காகவும், ஆன்ம நன்மைக்காகவும், நேர்மறையாகப் பலவிடங்களில் கருத்துகளைப் பதிவு செய்திருந்தாலும் சாம, பேத, தான, தண்டம் என்ற அடிப்படையிலும் அறம் உணர்த்தும் உத்தியையும் கையாண்டுள்ளனர். அவ்வகையில் அறம்

செய்யமாமல் பொருளை மேலும் சேர்த்துக்கொண்டே செல்லும் தன்னல மனம் படைத்தவர்களைப் பார்த்துத் திருமூலர்,

**இருமலும் சோகையும் ஈளையும் வெப்புந்**
**தருமஞ் செய்யதாதவர் தம்பாலதாகும்**
**உருமிடி நாகமுரோணி கழலைத்**
**தருமம் செய்வார் பக்கல் தாழகிலாவே (திருமந்திரம் - 263)**

என்ற பாடல்வழி அச்சுறுத்தி அறமுரைப்பதோடு, அறம் செய்பவர்களுக்குக் கிடைக்கும் நன்மையையும் பட்டியலிடுகிறார்.

**சாத்திரங்களை வெறுத்தல்**

சித்தர்கள் அனைத்தையும் அறிவு நிலையில் பார்ப்பவர்கள். கடவுளையும் தத்துவ நிலையில் உணர்ந்து உணர்த்துபவர்கள். எனவே சாத்திரங்கள், வேதங்கள், சடங்குகள் எதுவும் இறைவனைக் காட்டாது அவையனைத்தும் வெற்று ஆரவாரங்களே என்பதை அழுத்தமாக வலியுறுத்தியவர்கள் சித்தர்கள்.

**சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே**
**வேர்த்து இரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ**
**மாத்திரைப் போதும் உளே மறிந்து நோக்க வல்லிரேல்**
**சாத்திரப்பை நோய்கள் நோய்கள் ஏது சத்தி முத்தி சித்தியே (சிவவாக்கியர் - 14)**

என்ற பாடல் வாயிலாக வெற்று ஆரவாரச் சடங்குளால் விளைவது ஒன்றும் இல்லை என்பதைத் தெளிவாகச் சித்தர்கள் புரியவைக்கின்றனர்.

**முடிவுரை**

தமிழரின் பண்பாட்டு மரபிற்கும், அறச் சிறப்பிற்கும், புதுமை மனப்போக்கிற்கும், அஞ்சா நெஞ்சத்திற்கும், அழிவிலா இறையருள் போற்றுதலுக்கும் பல்கலை ஆக்கத்திற்கும் ஏற்றமளித்து எடுத்துக்காட்டுகளாய்த் திகழ்பவர்கள் சித்தர்கள். சித்தர்களை அடையாளப்படுத்துவதோ, வரையறுப்பதோ கடினம். ஏனென்றால் ஒவ்வொருவரின் தனித்துவமும் மரபை மீறிய போக்குமே சித்தர்களின் வரைவிலக்கணம். இவர்கள் தங்களுடைய வாழ்க்கையையும் உலக வாழ்க்கையையும் நுண்ணிதின் ஆராய்ந்து அறிந்தனவற்றை எல்லாம் விளக்கிப் பாடல்களாக தமது மொழி ஆளுமையால் வெளிக்காட்டியுள்ளனர்.